நவமணி.

நமது நவமணிக்கு வருட சந்தா ரூபாய் ஒன்றே. தினம் 1/2 பைசாவே நாம் நமது வீட்டிற்கு வலியவரும் நவமணிக்கு உதவுகிறோம். இதுவும் இனமல்ல நவமணியால் நாம் அடையக்கூடிய நன்மைகள் பல. அதற்குப் பிரதிப் பிரயோஜனமாக தினம் 1/2 பைசா நமது வாழ் நாளில் மீதப்படுத்தி உதவமுடியவில்லை என்றால் அது எவ்வளவு வெட்ககரமான விஷயம். இது வரை நீங்கள் ரூபாய் ஒன்று அனுப்பிப் பதிவுசெய்து கொண்டிருந்தால் சரி. இல்லையேல் உடனே அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளவேண்டுகிறோம். பழைய சந்தாதார் ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதார் சேர்த்துத்தரவேண்டு கிறோம்.

விளம்பரக்காரர்களுக்கு இது ஓர் சிறந்த போக்கிஷம். என்பதை ஞாபக மூட்டுகிறோம். உடனே விளம்பர மனுப்புங்கள்.

வெளிநாட்டிலுள்ளோர் ரூபாய் ஒன்றை அனுப்ப வேண்டும்.

உள்நாட்டிலுள்ளோர் ரூபாய் பன்னிரெண்டும் வெளி நாட்டிலுள்ளோர் பதினைந்தும் ஒரேகாலத்தி லனுப்பி விட்டால் பின் அதன் ஆயுள் வரை ஒன்றையும் எதிர் பாராமலே நமது நவமணி உங்கள் வீட்டிற்கு வந்துசேரும்.

மானேஜர்

நவமணி பத்திரிகாலயம்,

P. O. PALLATUR.

உயர்ந்தவேலை! குறைந்தகூலி!!

எங்கள் அச்சுக்கூடத்தில் கல்யாணம், புதுமை, சாந்தி, திருவிழா, கும்பாபிஷேகம் முதலிய விஷேடங்களுக்கு ஒரு கலர் முதல் பல கலரில் உயர்ந்த முறையில் குறைந்த கூலியில் எல்லாவித பத்திரிகைகளும் உங்களுக்கு வேண்டிய பிளாக்குகளுடன் குறித்த காலத்தில் செய்துகொடுக்கப்படும். புதிய அச்சு சாமான்களாகையால் அச்சு சுத்தமாகவும் கண் கவர் வனப்புடனும் விளங்கும். ஓர் முறை பரீஷியுங்கள்.

மானேஜர்

வேதாம்பாள் அச்சுக்கூடம், பள்ளத்தூர்.

எல்லா வியாதிகளுக்கும் சிறந்த மருந்து

மணிரசம் ஒன்றே!

இதன் விலை புட்டி 1க்கு	ரூ. 1—8—0
மணிதந்த சுத்திப்பொடி டப்பி 1க்கு	ரூ. 0—4—0
மணிமாத்திரை50கொண்டபாட்டில்1க்கு	ரூ. 1—4—0
மணி ஓமத்திராவகம் முழுபாட்டில் 1க்கு	ரூ. 1—0—0
மேற்படி பாட்டில் 1க்கு	ரூ. 0—10-0

கிடைக்குமிடம்.

மணி ஔஷதாலயம்.

P. O. கொத்தமங்கலம்.

Printed & Published by S. RM. Ramanatha Mudaliar
at Vedhambal Press, Pallatur. (Ramnad Dt.)

கடவுள் வணக்கம்.

1- SEP 1930

தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன தனதான.

கனகந்திரள் கின்றபெ ருங்கிரி
    தனில்வந்துத கன்தக னென்றிடு
    கதிர்மிஞ்சிய செண்டையெ றிந்திடு   கதியோனே

கடமிஞ்சிய னந்தவி தம்புணர்
    கவளந்தனை யுண்டுவ ளர்ந்திடு
    கரியின்றுணை யென்றுபி றந்திடு   முருகோனே

பணகந்துயில் கின்றதி றம்புனை
    கடல்முன்புக டைந்தப ரம்பரர்
    படரும்புய லென்றவ ரன்புகொள்   மருகோனே

பலதுன்பமு ழன்றுக லங்கிய
    சிறியன்புலை யன்கொலை யன்புரி
    பவமின்றுக ழிந்திட வந்தருள்   புரிவாயே

அனதன்பெயர் நின்றிரு ளுந்திரி
    புரமுந்திரி வென்றிட இன்புடன்
    அழலுந்த நகுந்திறல் கொண்டவர்   புதல்வோனே

அடல்வந்துமு ழங்கியி டும்பறை
    டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டென
    அதிர்கின்றிட அண்டநெ ரிந்திட   வருசூரர்

மனமுந்தழல் சென்றிட அன்றவர்
    உடலுங்குடல் லுங்கிழி கொண்டிட
    மயில்வென்றனில் வந்தரு ளுங்கன   பெரியோனே

மதியுங்கதி ருந்தட வும்படி
    உயர்கின்றவ னங்கள்பொ ருந்திய
    வளமொன்றுப ரங்கிரி வந்தருள்   பெருமாளே.

ஸ்தலமஞ்சரி.

ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்.

(சென்றமணியின் தொடர்ச்சி)

கந்தரத்தினலங் கரந்துபுலித் தோலாடை
தந்திரத்தினீக்கித் தனித்தவெழிற்—சுந்தரனைத்
தோற்றியதுஞ் செல்வத் துரைமகளார் செந்தளிர்க்கை
ஏற்றிடவே யண்ணுே விசை. (26)

இத்தனை நாணின்றதோ வென்பாவ மின்னருளை
யித்தனைநாட் சென்றதோ யீவதற்கே—தத்தும் வரி
யங்கயற்கட் டேனே யடியே னிளைதடியை
யிங்கயற்கண் காண விசைந்து. (27)

வந்தேனின் பொன்னடிக்கே மாளா விருவினையு
நைந்தே னெனக்கொண்டு நாவடங்க—வுய்ந்தே
னினிப்பிறவா வண்ண மெனக்களித்த வின்பத்
தனிப் பிறைவாள் நன்னுதலே தான். (28)

திருமயிலை (மைலாப்பூர்)

பெண்ணையெனும் பாக்கும் பெருந்தகைநீ நாணுறவே
பெண்ணெனவே யென்னைப் பிறப்பித்தான்—பண்ணமைசீர்
காழிவரு மைந்தன் கடனே மயிலையில்வாழ்
ஊழிமுதல் வாவோது வாய். (29)

கற்பகத்தி னற்பகத்தைக் கண்டோ கபாலியென
நிற்பதற்கிங் குள்ள நினைத்திட்டீர்—போற்பி
னிடுவா ருளரெனினு மேற்ற லுயர்வோ
விடுவீ ரிதனையினி மேல். (30)

(தொடரும்)

1- SEP 1930

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவமணி'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்]

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்]

மாலை 1. } பள்ளத்தூர் பிரமோதூத-சித்திரை. { மணி 4.

காசா? காமமா?

இந் நிலவுலகில் எல்லா உடைமைகளிலும் ஆண்களோடு பெண்களும் சமமாக இருக்கவேண்டியிருக்க பெண்களைப் பிரித்துப் பேடிகளென்றும் அடுப்பான்களைப் பூனைகளென்றும் மதித்து அவர்களை மிகக்கேவலமாக நடத்துவது யாது காரணம்பற்றி? நாம் வெளியில் சென்று சம்பாதிக்கிறோம். நாமே சர்வமும் வாங்கி அவர்களுக்கு அளிக்கிறோம். அதைப் பெற்று உண்டு உடுத்தி வாழும் இவர்களுக்கு என்ன சுதந்தரம் வேண்டியிருக்கிறது என்ற கர்வமா? நாமே பொருள் தேடுகிறோம். வெளியில் அலைகிறோம். நாடு சுற்றுகிறோம். அறிஞர்களோடளாவுகிறோம். காக்ஷிபல காண்கிறோம். நாம் நினைத்தால்தான் அவர்களும் போகலாம். காரணம்

பொருள் நாம் தானே தேடுகிறோம் என்ற எண்ணமா? நமக்காகவே நமது காமத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக காம ஆயுதமாக கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இவர்களுக்கும் நாம் நம் வாழ்வில் காணும் காக்ஷிகள் யாவையும் பங்கிட்டுக் கொடுப்பானேன். என்ற உணர்ச்சியா? இவைகளில் ஏதேனும் ஒன்றுபற்றி நமது தாய்மார்க ளின் முன்னேற்றம் தடைபட்டுளதேல் அதைக் களையவேண்டு வது ஆன்றோர் கடன்.

நாமே சம்பாதிக்கிறோம். 'நாமே சர்வமும் தேடி அவர்களுக் களிக்கிறோம் என்பது உண்மையாயினும் நமது சகோதரிகள் நமது சுக துக்கங்களில் பங்கெடுத்துக்கொண்டு சதா நம்மை இன்பத்தி லேயே இணையற்றிருக்க ஏற்பாடு செய்கின்றபடியாலல்லவோ நாம் சந்தோஷமாக வெளிச் சென்று தொழில் செய்கிறோம். பொருள் தேடுகிறோம். அநேகமாக உலகில் ஜீவன்கள் யாவும் ஒவ்வோர் முயற்சியாலேதான் உள்ளனவேயல்லமால் முயற்சியற்றிருக்கக் கண்டோமில்லை. அதில் மனிதர் தலைசிறந்தே விளங்குகின்றனர். இம் மானிடவர்க்கத்தில் ஆண் பெண் இருபாலாரும் சமமாகவே தொழில் நடத்துகிறார்களேயன்றி ஒருவரையொருவர் குறைகூற இடமில்லை. அங்ஙனம் எங்கேனும் இடமுளதேல் அது அந்த சந்த தியில் உள்ளவர்களின் குறைதானேயல்லாமல் பெண்கள் யாவரு டைய குறையுமல்ல. அல்லது ஆண் சமூகத்தினுடைய குறையு மல்ல. பொதுவாகப் பெண் மக்களுக்கும் ஆண்களைப் போல் கல் விப்பயிற்சியும் சுதந்தரமும் இருக்குமானால் ஆண்களைவிடப் பெண் கள் வெகு சீக்கிரம் முன்னேறிவிடுவார்கள். அதேபோல் இரு சமூ கமும் முன்னேற்றமடைந்தால்தான் நாடு முற்போக்கடைய முடி யும். சாதாரணமாக நாம் வெளிச்சென்று பொருள் சம்பாதித்த போதிலும் நமது சாந்திக்கும் மனச்சந்துஷ்டிக்கும் ஆகாராதிகள் சரியான காலத்தில் சரியான முறையில் பெறுவதற்கும் மக்கட்பே றுக்கும் அதன் இனிய வளர்ச்சிக்கும் பெண்கள்தான் காரணஸ்தர் களாக இருக்கிறார்கள். இதை எண்ணுகையில் நமது தொழிலினும் அவர்களது தொழில் அதிக சிரமமுடையதாகக் காண்கிறதேயல் லாமல் அவர்கள் தொழிலற்றவர்கள். சம்பாத்தியமற்றவர்கள் நாம் தான் சம்பாதிப்பவர்கள் என்ற கர்வ எண்ணங் கொள்ள இடமே யில்லை.

பெண் சமூகத்திற்குக் கல்வியறிவு விசேஷமாகப் புகட்டப்படு மானல் நமது இனிய வாழ்கைக்கும் நோயற்ற உணவிற்கும் சுகாதாரமுள்ள குடும்பவளர்ச்சிக்கும் அவர்கள் காரணஸ்தர்களாக விளங்கி நமது பிற்கால வாழ்க்கையை இன்னும் மேம்படச்செய்வார்கள். அதை விடுத்து அவர்களை நாம் அடிமையாக்குவோமேயானல் அவர்களின் குறை நம்மையும் அடிமையாக்கும்.

அடுத்துப் பெண் சமூகம் காமத்திற்காகவே உண்டாயது என்ற தப்பெண்ணம் சிலரால் கொள்ளப்பட்டுள்ளது மிகவும் வருந்தத்தக்கது. ஆடு மனிதனது ஆகாரத்திற்கே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது. அதைக் கொன்று தின்னது போனல் அது பலுகி மனித சமூகத்தை அழித்துவிடும் என்ற விதண்டவாதிகளின் போக்கு வெள்ளைக்காரர் நம்மை ஆள்வதற்கே பிறந்தவர். அவர் நம்மை ஆளவில்லையேல் நாம் நாகரீகமற்று கொலை கொள்ளை சமூகச் சண்டைகளில் ஈடுபட்டு தேசத்தைக் கெடுத்துவிடுவோம். நாம் வெள்ளைக்காரருக்கு என்றென்றும் அடிமையாகவே வாழ வேண்டும் என்பவர்களின் சொல்லும் பெண் சமூகத்தை முன்னுக்குக் கொண்டுவந்தால் ஆண் சமூகத்திற்கு அழிவு வந்துவிடும். அதனல் அவர்கள் சாஸ்வத அடிமையாகவே வாழவேண்டும் என்பாரின் செயலும் ஒன்ருகவே அறிஞர் அறிவர். காமத்துறையிலும் பெண்களை அடிமையாக்கி ஆண்கள் செய்யும் அட்டூழியங்கள் அடங்கற்பாலனவல்ல. பெண் விபசாரம் கொடிது. பெண்கள் கற்பிழத்தல் கூடாது. ஒரு பெண் ஏகபர்த்தா விரதம் பூணல் வேண்டும் என்ற கண்டிப்புத்திட்டங்கள் பல உள்ளன. ஆண்களோ கண்டபடி விபசாரஞ் செய்யலாம். எத்தனை பெண்களை வேண்டுமானலும் மணக்கலாம். அது குற்றமில்லை. இவ்வாறு, ஓருயிர் ஈருடல் போன்று குடும்பம் அல்லது உலகியல் நடத்தவேண்டிய இரு சமூகங்களுக்கும் பலத்த வேற்றுமைகளைப் புகட்டி படித்தவர்களும் கூட இதை ஒப்பி ஒரு சமூகத்தை ஒரு சமூகம் அடிமைப்படுத்தி யிருப்பதனலேயே நம் நாடு பெரும் அடிமைப்பட்டிருக்கிற தென்பதை இங்கு ஒவ்வோர் வரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அடிமை நாடொவ்வொன்றும் முன் இவ்வாறே யிருந்தபோதிலும் அது விடுதலை பெறுமுன் பெண் விடுதலை கிடைத்துவிடுவது சகஜமே. பெண் சமூகம் விடுதலை பெற்ருல்தான் அவர்கள் முத

வில் சந்தோஷமடைந்து ஆண் சமூகத்தையும் சந்தோஷமடையச் செய்வார்கள். சந்ததி விர்த்தியில் ஆக்கம் பெற்று பிறக்கும் குழந்தைகள் புஷ்டியாயும் சந்துஷ்டியாயும் பிறந்து நீண்ட ஆயுளையடைய எதுவாகும். இதை இன்று சுதந்தரத்துடன் வாழும் நாடொவ்வொன்றிலும் காணலாம். நாட்டின் சுதந்திரத்திற்குப் பெண் விடுதலை பெரிய காரணமாக விளங்குவதால் இந்திய நாட்டினர் நம் தாய்மார்களை நம்பி அவர்களுக்குப் போதிய கல்வியறிவும் எல்லா விதத்திலும் சுதந்தரப் பயிற்சியும் அளித்து ஆண்களுடன் சமமாக ஆண் சமூகம் அனுபவிக்கும் ஒவ்வொன்றையும் அவர்களும் அனுபவிக்கும்படியும் உடனே எற்பாடு செய்தல் வேண்டும்.

இதைப் பொருட்படுத்தாமல் பெண்சமூகத்திற்கும் சுதந்தரத்திற்கும் என்ன சம்மந்தம் என்ற எண்ணங்கொண்டோ அல்லது இன்னும் அவர்கள் அடிமைகளே என்ற எண்ணங் கொண்டோ நாம் நாட் கடத்துவோமேயானால் படித்த சில பெண்கள் முன் வந்து பிரசாரஞ் செய்து இப்பொழுது சுதந்தரப் பிரசாரம், சுயமரியாதைப் பிரசாரம் முதலியன முன்னேற்றமடைந்திருப்பது போல் பெண்கள் விடுதலைப் பிரசாரமும் பரவி பின்னர் நாம் அவர்களை அடக்கமுடியாத நிலையில் விட்டுக்கொடுப்பது பெரிய எளனத்திற்கு எதுவாகும். காரியம் அவ்வளவு தூரம் முற்றிப் போகு முன் நாமாகவே நமது நன்மையை யுத்தேசித்துப் பெண் சமூகத்திற்கும் விடுதலை கொடுத்தலே நலம். இதை இந்தியர் உடனே செய்ய வேண்டுகிறோம்.

மாதர்தம்மை யழிவு செய்யு மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலேந்த வகையிலும் நமக்குளே;
தாதரேன்ற நிலைமைமாறி யாண்களோடு பெண்களும்
சரிநிகர், ஸமானமாக வாழ்வமிந்த நாட்டிலே. (பாரதியார்.)

மணியொளி.

புதிய ஆண்டு.

வழக்கம்போன்று செல்லும் பைங்குனித் திங்களுடன் சென்ற சுக்கில ஆண்டிற்கு வாழ்த்துக்கூறி வரும் சித்திரைக் கிளையுடன் கூடிய இப் புதிய பிரமோதூத ஆண்டை மனமுவந்த வணக்கத்துடன் வரவேற்கிறோம். இப் புதிய ஆண்டு இந்தியாவிற்குப் பல துன்பங்கள் நிறைந்துள்ள சமயத்தில் துவங்குகிறபோதிலும் துன்பம் யாவையும் களைந்து இந்தியர் சுதந்தர இன்பமுற்றார் என்ற பெரும் பெயர் உண்டாகும்படி இவ்வாண்டு ஏற்படுமானால் இப் புதிய ஆண்டு இந்திய சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கும். எனவே இப் புதிய ஆண்டில் சுகம் பல நல்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மஹான் காந்திஜீ.

புதிய சுதந்தரப் போரின் நிமித்தம் நியந்தனையன்றியும் விசாரணையன்றியும் சர்வ வல்லமையுள்ளவர்களெனக் கொண்டாடப்படும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நள்ளிரவில் நம் மஹான் காந்திஜீயைக் கைதி செய்து தனி வண்டியில் அவர்கள் முன்னர் வாசஞ் செய்த எர்வாடா ஜெயிலில் கொண்டுவந்து வைத்து வேண்டிய சௌகர்யங்களைச் செய்து கொடுத்துப் பாதுகாக்கிறார்களென்ற செய்தி கேட்ட ஒவ்வோர் இந்தியரும் ஓர் புரம் வருத்தத்தையும் மற்றோர் புரம் சந்தோஷத்தையும் ஒரே காலத்தில் அனுபவிப்பார்களென எதிர்பார்க்கிறோம். இது முன்னரே எதிர்பார்க்கப்பட்ட செய்தியே. என்று மஹாத்மாஜீ தர்சனா செல்ல விரதம் பூண்டு சபர்மதியிலிருந்து வெளிக்கிளம்பினாரோ அன்று முதல் ஒவ்வோர் நாளும் எதிர்பார்த்தது இப்பொழுது நிகழ்ந்துவிட்டது. இதில் அதிசயமொன்றுமில்லை. அன்னாரின் பாதுகாப்பில் நம்மைவிட கவர்ன்மெண்டார் அதிக முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்பதற்கு அவர்களை

இராஜாங்க விசேஷக் கைதியாகப் பாவித்து மாதம் 100-ரூபாய் அவர்களின் செலவிற்கு மட்டும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதிலிருந்து நன்கு தெரியும். அவர்களைப் பற்றினவரையில் சிரமமொன்றுமில்லை. ஏனென்றால் தியாகமூர்த்தியான அப் பிரபு அதற்கென்றே தோன்றியுள்ளார். வெளியில் அவர் துவங்கிய இயக்கம் ஜனுப் அப்பாஸ் டயாப்ஜீ என்ற வயோதிகரின் தலைமையில் சிறப்பாக நடைபெறும்.

பூகம்பம்.

பர்மாவில் இம்மாத மேற்பட்ட பூகம்பத்தால் மிகுந்த சேதம் ஏற்பட்டதெனக் கேட்ட யாம் அதற்காக வருந்துகிறோம். இது இயற்கையில் கடவுள் செயலால் உண்டாகும் பல்வேறு அபாயங்களுள் ஒன்றாகும். இதற்குப் பர்மாவின் தலை நகரான இரங்கோன்உள்பட பக்கோ தோங்குவா முதலான இடங்கள் அதிகமாக உள்ளாகி பெரு நஷ்டத்திற் காளாகி விட்டதென அறிகிறோம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் வீடும் ஆகாரமும் இல்லாதபடி தவிக்கிறார்களாம. பூகம்ப அதிர்ச்சியினால் மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்து தீப்பற்றிப் பல வீடுகள் சேதமடைந்தன. பூகம்ப வெடிப்பினால் ஜலப்பிரவாக முண்டாகி சில வீடுகள் போயின. பலர் உயிர் துறந்தனர். இது சம்மந்தமாக மிகுந்த கோரமான காக்ஷிக்கு ஆளான பர்மாவாசிகளுக்கு அந் நாட்டிலும் இந் நாட்டிலும் உள்ள தனிகர்கள் உடனே கவனித்து தகுந்தது உதவி அவர்களின் நஷ்டத்திலிருந்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டுகிறோம். பர்மா கவர்ன்மெண்டாரும் இதர சேவா சங்கங்களும் வேண்டியன செய்யுவார்களென எதிர்பார்க்கிறோம்.

தலைவர் ஜாவேரிலால்ஜீ.

இந்திய தேசீய மஹாசபையின் தலைவரும் இளம் வீரருமான பண்டித ஜாவேரிலால்ஜீக்கும் சிறைபாக்கியம் ஏற்பட்டுவிட்டதை யறிந்த ஒவ்வோர் வரும் அவரைப் பாராட்டுவரென எதிர்பார்க்கிறோம். அவருக்குப் பின்னர் அவரின் ஸ்தானத்தில் அவரின் தகப்பனாரான பண்டித மோதிலால்ஜீயே மீண்டும் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். இவர்களின் தலைமையில் இயக்கம் சிறப்புடன் நடைபெறலாம். இத்தியாதி ஒரு குடும்பத்தைப்படைத்த இந்தியா கட்டாயம் விடுதலை பெறும் என்ற நம்பிக்கைக்கு அவர்கள் இலக்கென நாம் எண்ணுகிறோம்.

நிலைத் தேர்.

(பாற்கடலோன் பகர்வது.)

பண்டைக்காலத்து நமது தமிழ்மக்கள் அரிதாகப் புனைந்தியற்றிய இனிய தமிழ் நூல்களுள், சிலர் நூல்களில் மட்டும் காணப்படுவதாகலின் இவ்விஷயம் நம் நவமணியில் இடம் பெறுதற்கு ஏற்றதாகுமென எழுதலானேன்:—

"மதுரைக் காஞ்சி" யென்னும் நூலில் வீடுகளின் அமைப்பைப்பற்றிச் சொல்லுகின்ற இடத்தில்,

> வகைபெற எழுந்து வானம் மூழ்கிச்
> சில்காற்று இசைக்கும் பல்புழை நல் இல்.

என்று சொல்லப்படுகின்றது. அதற்கு உரைவகுத்த உச்சிமேற்கொள்ளும் நச்சினார்க்கினியர், 'மண்டபம், கூடம், தாய்க்கட்டு' அடுக்களை என்றாற் போலும் பெயர்களைப் பெறுதலின் வகைபெற எழுந்து என்றார்.' என உரைத்திருக்கின்றனர்.

நகர வணக்கங் கூறவந்த பிற்காலக் கவிகளும், நகரின் வீடுகளின் அமைப்புக்களை நன்கு கூறினர். அவருட் கம்பரும்,

> பாடகக்காலடி பதுமத் தொப்பன
> சேடரைத் தழீஇயன செய்யவாயின
> நாடகத் தொழிலன நடுவு துய்யன
> ஆடகத் தோற்றத்த அளவிலாதன.

என மனைகளைக் கூறுவராய் மனைக்கு விளக்கமாய மடவார் இயல்புகளையும் சிலேடையாற் கூறிப் பெறவைத்தார்.

மேல் நச்சினார்க்கினியர் கூறிய மண்டபம் என்னும் பதியையும் பலப்படுத்தி—

> மன்னவர் தருதிறை யளக்கு மண்டபம்
> அன்ன மென்னடையவராடு மண்டபம்
> உன்னரு மருமறை யோது மண்டபம்
> பன்னருங்கலை தெரி பட்டிமண்டபம்.

(கம்—இரா—நகரப்படலம். 63)

எனக் கூறிப் பின்னும் இல்லங்களின் பல பகுதியையும்,

பொன்றிணி மண்டபம் அல்லபூத் தொடர்
மன்றுகள் அல்லன மாடம் மாளிகை
குன்றுகள் அல்லன மணிசெய் குட்டிமப்
முன்றில்கள் அல்லன முத்தின் பிந்தரே. (ஷ நகர-39)

எனக் கூறினர்.

இனி பெரியபுராணம் பாடிய நமது குன்றத்தூர் சேக்கிழார் பெருந்தகையும் இல்லங்களின் பகுப்புக்களை.

மாடம் மாளிகை சூளிகை மணடபம்
கூடசாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடுசாளர நீடாங்கு (எங்கணும்
ஆடன் மா தரணி இலம் பார்ப்பன.)

என்னும் திருவிருத்தத்துள் கூறியருளினர்.

இவற்ருல் நகரமாந்தர் வசித்துவரும் இல்லங்களைப்பற்றிக் கூறவந்த நமது கவிமக்கள் அவற்றின் பல பகுப்புக்களையும் கூறினர் என்பது பெற்றும்.

இவற்றோடு நிலைத்தேர் என்னும் ஒரு பகுப்பும் வீடுகளின் பகுதியினதாய் அமைக்கப்பெறும் என்பதையும் நாம் அறிய வேண்டும்; பெரிய நகரங்களில் இன்றும் செல்வர் மாளிகையிற் சில தேர்போற் கட்டப்பட்ட பகுப்புக்களை யுடையவாயிருக்கக் காணலாம். ஆனல் இப்போது காணப்படுகின்ற வற்றிற்கும், கவிகள் கூறுவதற்கும் வேற்றுமை யுண்டு. அந்நிலைத் தேர்கள் வீடுகளில் வீதியோரங்களில் அமைக்கப்பெறும் எனவும், அவற்றில் தேர்க்குரிய உறுப்பாகிய சக்கிரம் முதலியவை யுண்டென்றும், பெரிய தம்பங்கள் நிறுவி அவற்றின் மேல் இவை நிலை பெறுத்தப்படுமெனவும், அவை பம்பரம்போல் சுழலும் தன்மையையும் உடையவை எனவும் இவற்றிலிருந்து கொண்டு மகளிர், சிறுவர் முதலியோர் வீதியிலே யுறும் பலவித வேடிக்கைகளையும் பார்ப்பர் எனவும்

அறியக் கிடக்கின்றது. அதனைக் கந்தபுராணம் திருநகரப்படலம் 28-வது பாடலில் காண்க. அது:—

செம்பொனிற்புரி நிலையுடைத்திகிரியந்தேர்கள்
அம்பரத்திடை வசியுற வீற்று விற்றுரும்
தம்ப முற்றலமருவென செய்ய கோற்றலையின்
பம்பரத்துருத்திரிய புறக்கறங்கியபடிய''

என்பதாம்.

இனிப் பிரபுலிங்கலீலையிலும், இந்நிலைத்தேரைப்பற்றிக் கூறப்படுகின்றது. அது—

போதகக்குருநம் மூருட்புகக் கொடிகட்டல் நன்றென்
றுதகத்தொடு சமைத்தாரக்கொடி மாடத்தும்பர்
சோதிதன்னிரதமென் றுஞ் சுழன்மென நகுல்போல்
வீதியுளாடியோடு விளங்குறு நிலைத்தேர் செய்தார்.

(சூனிய சிங்காதனகதிப்படலம். 10)

மதிவாணன் என்னும் நவீனகத்தில் அக்கதைத் தலைவன் அரண்மனையில் ஒரு அறையில் தங்கினபொழுது அது சுழன்று வந்தது எனக் கூறிய பரிதிமாற் கலைஞர்க்கும் மேற்குறித்தவற்றிலிருந்து இக் கருத்து உதித்தது போலும்.

இதனால் வீடுகளின் பகுப்புகளில் 'நிலைத்தேர் என்பதும்' ஒன்றென அறிகிறோம்

உயர்ந்த வேலை! குறைந்த கூலி!!

கல்யாண கார்டு, பத்திரிகை, கவர், லெட்டர் பேப்பர், விசிட்டிங் கார்டு, துண்டுப் பிரசுரங்கள், உற்சவப் பத்திரிகைகள், கிராம பாரங்கள் முதலிய எல்லா வேலைகளும் ஒரு கலர் முதல் பல கலரில் மிக அழகாகவும் குறைந்த கூலியிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.

மானேஜர், வேதாம்பாள் அச்சுகூடம், பள்ளத்தூர்.
(இராமநாதபுரம் ஜில்லா.)

சம்பந்தர் வெற்றி.

(துகளல் எழுதுவது)

திருஞான சம்பந்த மூர்த்திகள் பிள்ளைப் பருவத்திலேயே ஜைன முதியாரோடு மதுரையிலே வாதங்கள் நிகழ்த்தி கூன் பாண்டியனைத் திருத்திப் பணிக்கொண்டு சைவ சமயத்தை நிலை நிறுத்தினர் என்பது திருவால வாய்ப்புராணங்களிலும் பெரிய புராணத்திலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கவிச் சக்கிரவர்த்தியான ஒட்டக்கூத்தர், பரமசைவராவர். அவர் ஆற்றங்கரைச் சொற்கிழத்தியின் அருள் பெற்றவர். எனவே அச்சொற்கிழத்தியே உமாதேவியின் கொலுவிலே பிற்காலத்திலே நிகழுவதற்குரிய இவ் வரலாற்றினைக் கூறி தேவியாரால் கொண்டாடப் பெற்றுள் என்று இக் கதையினைத் தமது தக்கயாகப் பரணியின் ஒரு பகுதியாக அமைத்துள்ளார். இது கோயில் பாடியது என்னும் அதிகாரத்தின் பெரும் பாகமாக அமைந்துள்ளது. கூத்தர் கூறும் வரலாறு பின்வருமாறு:-

அப்படிப்பட்டதான நிகரற்றதொரு தெய்விக ஆலமரத்தின் கீழே எவ்வுலகுகளையும் தனியே தாக்குகின்ற ஸர்ப்பராஜனே அமளியாகவும் பூர்ணசந்திரனே வெற்றிகுடையாகவும் வாடையும் தென்றலும் இருபுறமும் சாமரையிட்ட நாயகி உமாதேவியார் வீற்றிருந்தனர். அப்பொழுது அவ்வரசபள்ளியின் அருகே நின்ற அகிலா கலாவல்லியான ஸரஸ்வதிதேவியை நோக்கி அம்பிகை கூறுவாள்:—'என் மகன் முருகன் கலியுகத்திலே ஒரு பிள்ளையாய்ச் சென்று மதுரையில் அமணரை வென்றதான இனிய கதையைச் சொல்லுவாய்' என்று: அது கேட்டு சரஸ்வதிதேவி

"பொய்கைசூழ் புகலிப் பெருந்தகை
பொன்னிநாடு கடந்து போய்
வைகைசூழ் மதுராபுரித்திரு
வாலவாயை வணங்கியே"

என்று "அமணர் கழுமிசை கொண்டகதை"யைக் கூறத் தொடங்கினாள்.

பொய்கைகளாலே சூழப்பெற்றது. புகலி எனப்படும் சீகாழி, அவ்வூரிலே அவதரித்த பெரியாரான திருஞான சம்பந்த மூர்த்திகள் அங்கிருந்து புறப்பட்டு பொன்னிநாடு கடந்துபோய் வைகை நதியினாலே சூழப்பட்ட மதுராபுரியிலேயே யுள்ள திருவாலவாயான க்ஷேத்திரத்தைக் கண்டு வணங்கினர்.; வணங்கிய பின், பரசமய கோளரியான சம்பந்த மூர்த்திகள் ஞாயில்கொண்ட மதிற்புறத்தே ஒரு திருமடத்திலே கோயில் கொண்டெழுந்தனர். அந்த மடத்தை குண்டர்கள் வெங்கனல் கொண்டு கொளுத்தினர். அது கண்டு பிள்ளையார் சினங் கொண்டனர்; அவருடைய சினத்தீயை உதவியாகப் பெற்ற தைரியத்தோடு குண்டரிட்ட தீயானது தென்னர் பிரானான பாண்டிய ராஜனுடைய உடலத்திலே கொளுத்தி அவ்வுடலைக் கொதிப்பித்தது. அப்போது

"யந்திரங்கள் வரைந்து கட்டி
விரைந்து குண்ட ரெடுக்குமா
மந்திரங்களின் மிக்க பேரழல்
மாதிரங்களின் மண்டலே"

ஆலிவெந்தது; மந்திரமும் வெந்தது; யந்திரமும் வெந்தது; பீலிவெந்தது; அருகதேவன் அமர்ந்துள்ள பிண்டி விருக்ஷத்திலும் அந்த அக்கினி மண்டிற்று.

அத்தருவாயில் தென்னர் பிரானுடைய இரண்டு கண்களையொத்த பாண்டிமா தேவி மங்கையர்க் கரசியாரும் பெரு நம்பி குலச்சிறை யாண்டாரும் என் செய்வோம் என்று எண்ணிப் பெரிதும் அஞ்சினர்கள். திருஞான சம்பந்தமூர்த்திகளான பிள்ளையாரை அழைப்பதற்கு இதுவே காலமாகும் என்று துணிந்தனர். உடன் அதிகாரியான குலச்சிறையாரும் வைதிகராஜஸிம்ஹமான சம்பந்தமூர்த்திகளிருந்த இடத்திற்குச்சென்று அவர் திருமுன் விழுந்து நமஸ்கரித்து எழுந்து தம்முடைய குறை தீர அரசனைக் கண்டு கடாக்ஷித்து நேரியர்பாவையின் திருவைக்காத்தல் வேண்டுமென்று பிரார்த்தித்தனர். பூதேவர் இருபுடையும் சூழ்ந்துவர, நிரையாக பரு முத்துக்களாலே அமைக்கப்பட்ட திருப்பள்ளிச் சிவிகையிலே ஏறி கவரிகள் தென்றலசைப்பகொற்றக்குடை

கவிப்ப வழிநெடுக அமைக்கப்பெற்ற முத்துப்பந்தரின் வழியாக வைதிகவாரணமான சம்பந்த ஸ்வாமிகள் அரண்மனையை அடைந்தனர் அப்போது,

சதுராননனுஞ் சக்ராயுதனுஞ்
சந்த்ராதபருமிந்த்ராதியரும்

"மதுராபுரிவாதினை அறிவோம்" என்று ஆகாசத்தில் வந்து நின்றனர்.

அரண்மனைக்கு வந்து தரிசனந்தந்த பிள்ளையாரின் திருப்பாதங்களிலே மங்கையர்க்கரசியார் வணங்கினர்; வணங்கி

'மன்' காதலில் உய்வது இவ்வையம் எலாம்
மலையாண்முலையாரமுது உண்டவனே!
என்காதலன் என் பெருமான்
இவனுக்கு இதுவோ தகவு" என்றனள்.

என்றதுமே பிள்ளையார் அருள்கூர்ந்து அசிர்வதிப்பார்.

"மாமான் மரபிற்பகன் மண்டில்மொத்து
எரிமண்டினனேனும், மகிபதி நின்
கொமான் மரபிற்சசிமண்டில நேர்குளிரும்படி காணுதி,
கோமளமே"

"கோமளஸ்வரூபியே! தன்னுடைய மாமனரான சோழராசனுடைய வமிசத்து முதல்வனான சூரியனைப் போல காந்துகின்ற இந்த அக்னியானது உன்னுடைய கோமானாகிய பாண்டியனுடைய வமிசத்து முதல்வனானசந்திரனைப்போல குளிர்ச்சி தருகின்ற அதிசயத்தை இதோ காண்பாய்" என்றனர். இவ்வாறு பிள்ளையார் ஆசிர்வதிக்கவே, குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் பிள்ளையாரை வரவேற்று தென்னர் பிரானருகிலே ஒரு ஆஸனமிட்டு 'இத்தனிப் பீடிகையிலே இனிது எறியிருந்தருள் செய்க' என்று பிரார்த்தித்தனர். அவ்வாறே பிள்ளையார் அந்தத் திருப்பள்ளித்தவிசிலே எறியிருந்தருளக் கண்ட சமண்முகர் பிள்ளையாரையும் இகழ்வராயினர்.

வருவான் ஒரு சோழியவைதீகனும்,
வந்தால், இவன் மாளிகைவாயில் தனில்

வெருவாது புகுந்து தொடப்பெறுமோ
பிளச்சோழியன் திருமேனியையே.

இகழ்ந்து 'முனி புங்கவர் ஒரெண்ணாயிரவர்க்கும் விடாத வெதுப்பு இவனால்விடும் என்பதோ" என்றனர். என்றலுமே! குலச்சிறையார் கெடுவீர் எரியால் அரவால் இடியால் முடியச் சென்று ஏழு பிறப்பினும் இப்படியே செல்வார் மாகேசுவரைப் பழிப்பவர்கள். இதனை நீங்கள் அறியமாட்டீர்கள். இவர் தம் திருநீறும் இடவே மதுரேசனை நம்மரசன் இந்திரனும் பெறுத கவின் பெறுவதைக்காணிர் என்றனர். என்று அவர்களை அடக்கிய பின், திருஞான சம்மந்தமூர்த்திகளை நோக்கி 'இமவான் மகளார் மகனே! எந்தாய்! சிந்தாகுலவேரியுஞ் சேயே! வீர சைவ சிகாமணியே! திருநீறிட்டருள் செய்க' என்றனர்.

எவ்வித புத்தரோடு எவ்வித அமணரையும் களைந்தெரிகின்ற சம்பந்தமூர்த்திகள் பாண்டிய ராஜனுடைய நெற்றியிலே திருநீறு இடலும் வெப்பு தடைப்பட்டது; அரசனும்,

உய்யா, உணரா, விழியா கருகே
சரியா, ஒருகேசரி ஆசான மேல்
வையா, அதிகாரிகளும் பெருமாள்
மகளாரும் வணங்க, வணங்கினனே.

"நாம் அனைவரும் அருகிருந்து மந்திரித்தும் விடாத வெதும்பை இவ்வேதியன் வெறும் பொடியால் விடுவித்தனனே' என்று அதிசயித்த அமணர் அரசனை நோக்கி,

"ஒருநீ ஒருமாணி இடும்பொடியால்
உய்ந்தேன் உயிர்என்பது உரைத்தனையேல்
வருநீரிலும் இட்டு நெருப்பினும் இட்டு
அறிவோம் இருமந்த்ர மும்யந்த்ரமுமே"

என்று கூறி பிள்ளையாரை வாதுக்கு அழைத்தனர்; அழைத்து சபதங் கூறினர்;

'வேகின்ற எட்டினை உடையாரையும் வைகையிலே விட்டால் அதன்மீது மிதந்து ஒழுகிப்போகின்ற ஏடு உடையாரையும் நீ கழுவிற் புகுவிப்பாய், தேக்கண பூபதியே!" என்று.

அக்கொடிய சபதத்தைக்கேட்டு அஞ்சிய பாண்டிமாதேவி யார் "மழைதங்கெனவந்த ஐயனே! வாழி! இனி பிரமாபுரமேறி மறித்தருள்; இக்கெடுவாரோடு போர்புரியவொட்டேன்"! என்று தாள் பற்றி வணங்கித் தடுத்தனள். அப்போது பிள்ளையாரின் தோற்றத்தினை கவிச்சக்கிரவர்த்திகள் அழகாக வருணித்துள்ளார்.

காதிற்கனகக் குழைநின்றிலக
கமழுங்குழன் முன்பு கலந்தசையச்
சோதித்திரு நெற்றியில் நீறிலகச்
சுட்டிக்கலன்மீது துலங்கவே.

என்று அதுகேட்டு, பிள்ளையார் தேவீ. கேள்; கனல் எம் கனல்; கார் எம் கார்; புனல் எம் புனல்; அவைகளை யான் பணி கொள்வேன்" என்று தைரியங் கூறி வாதுகளம் சென்றனர்.

அங்கு கையரிட்ட ஏடுகள் கனலிலே வெந்தன; வையை யிலே இட்ட ஏடுகள் அந்நதி கடல் புகாவிடினும் கடல் புகுந்தன. ஐயன் இட்ட ஏடுகளோ கனலிலே பொற்போடு விளங்கியும் ஆற் றின் எதிர் சென்றும் வெற்றியளித்தன. அது கண்டு,

வெற்பும் பிளவோட கலித்தனவால்
வேதங்களும் ஐம்பூதங்களுமே
மேல் நின்ற சுராசுரர் ஆர்த்தனரே;
திருமாலும் விரிஞ்சனு மார்த்தனரே;
பால் நின்ற சராசரம் ஆர்த்தனவே;
பதினாலுலகங்களும் ஆர்த்தனவே.

அப்போது பிள்ளையார் பாண்டியனை நோக்கி வாராய் வாராய் வழுதீ! இவருடைய ஆகமங்களுடைய துல்லபமும் எங்க ளுடைய சிவாகமங்களின் வல்லபமும் பாராய் என்று அழைத்து ஒரு கூன்மிசை வைத்திருக்கையை புறத்தொரு கூன்மிசை வைத்தனர். வைத்தலுமே தென்னவர்கோனுடைய முதுகும் தட மார்பும் இடம்பெறவே இருகூனும் நிமிர்ந்தன. உடம்பு ஒரு பொன் மயமாய் ஒளிவிட்டு விளங்கினன் மீனவன். அரசன் அப்போது அமணருடைய சபதத்தை நினைந்தும் பிள்ளையாரை அவர்கள் இகழ்ந்ததை நினைந்தும் வேதப்பகைவரான இவ்வமணரை வெங்க ழுவிலே ஏற்றுங்கள் என்றனர்.

(தொடரும்.)

கடவுள் வணக்கம்.

தன தந்தன தந்தன தந்தன
தன தந்தன தந்தன தந்தன
தன தந்தன தந்தன தந்தன தனதான.

கனகந்திரள் கின்றபெ ருங்கிரி
தனில்வந்துத கன்தக னென்றிடு
கதிர்மிஞ்சிய செண்டையெ றிந்திடு கதியோனே

கடமிஞ்சிய னந்தவி தம்புணர்
கவளந்தனை யுண்டுவ ளர்ந்திடு
கரியின்றுணை யென்றுபி றந்திடு முருகோனே

பனகந்துயில் கின்றதி றம்புனை
கடல்முன்புக டைந்தப ரம்பரர்
படரும்புய லென்றவ ரன்புகொள் மருகோனே

பலதுன்பமு ழன்றுக லங்கிய
சிறியன்புலை யன்கொலை யன்புரி
பவமின்றுக ழிந்திட வந்தருள் புரிவாயே

அனதன்பெயர் நின்றுரு ளுந்திரி
புரமுந்திரி வென்றிட இன்புடன்
அழலுந்தந குந்திறல் கொண்டவர் புதல்வோனே

அடல்வந்துமு ழங்கியி டும்பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டென
அதிர்கின்றிட அண்டநெ ரிந்திட வருசூரர்

மனமுந்தழல் சென்றிட அன்றவர்
உடலுங்குட லுங்கிழி கொண்டிட
மயில்வொன்றனில் வந்தரு ளுங்கன பெரியோனே

மதியுங்கதி ருந்தட வும்படி
உயர்கின்றவ னங்கள்பொ ருந்திய
வளமொன்றுப ரங்கிரி வந்தருள் பெருமானே.

ஸ்தல மஞ்சரி

ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்.

(முன் தொடர்ச்சி)

திருவான்மியூர்.

கருவான் மயூரமெனக் கைஞ்ஞானம் யாவும்
ஒருவா வறிவொன்றே யோங்கத்—தருவாய்
திருவான்மியூரிற் றிகழுமருந் தீசாநல்
லருவான் சுவையா மருள்.

திருவாலங்காடு.

காலங் காட்டும் யுகங்கணக் கின்றியே
மூலங் காட்டு முழுநலங் காட்டிடும்
சீலங் காட்டி நடித்தரு ளுந்திரு
வாலங் காட்டி லடிக ளடிகளே.

கருவாலிங் காட்டிவினைக் காட்டகத்தோர் பேயாய்
வருவே னெனையு மரபால்—ஒருவாதே
யண்டமுற வாடு மதிர்கழலின் கீழிருத்திக்
கொண்டிடினிற் கென்னே குறை.

பாரைக் கோல்கொளும் பத்திமைப் பாவையாம்
காரைக் காலனை யேவென் கருவினை
வேரைக் காலற வீசி விலையிலா
சீரைக் கோல்கொளச் செய்குவ தென்றரோ.

திருக்கழுக் குன்றம்.

வழுக்குன்ற மானப் புரிந்திடுவேனருள் வாசகநறை
ஒழுக்குன் திருவடிப் போதடைந் தேனினி யொன்று
[மஞ்சேசன்
எழுக்குன்ற வோங்கு மிருபான்புயற்கு மினிதருள்செய்
கழுக்குன்ற நாயக னேகை விடேலெனைக் காத்தருளே.

(தொடரும்.)